*குந்தவை நாச்சியார் அரசினர் மகளிர் கலைக் கல்லூரி (தன்னாட்சி),*
*தஞ்சாவூர் – 613 007.*

***Fine Arts Club* நுண்கலை மன்றம் – 2023 – 2024**

*இக்கல்வியாண்டில் நுண்கலை மன்றம் சார்பாக மாணவர்கள் பல்வேறு கல்லூரிகளிலும் அமைப்புகளிலும் நடத்தப்பட்ட பல்வேறு போட்டிகளில் பங்கேற்று முதற்பரிசு மற்றும் ரொக்கப் பரிசுகள் பல பெற்று நம் கல்லூரிக்கு பெருமை செய்தனர். உலக மக்கள் தொகை தினம் (11.07.2023) காமராசர் பிறந்தநாள் விழா (15-07-2023), தமிழ்விழா (30.9.2023) கலைஞர் நூற்றாண்டுவிழா (13.10.2023), பெரியார் பிறந்தநாள் விழா (14.10.2023), காந்தியடிகள் பிறந்தநாள் விழா (11.1.2024), வள்ளலார் தினம், பாரதி உலா, வாக்காளர் தினம் மற்றும் இளைஞர் இலக்கியத்திருவிழா ஆகிய போட்டிகளில் பங்கேற்று இரண்டாமாண்டு கணினி அறிவியல் துறை மாணவி மு.காவ்யா முப்பத்து நான்காயிரம் ரூபாய் ரொக்கப் பரிசு பெற்றார். இரண்டாமாண்டு இளநிலை விலங்கியல் துறை மாணவி பிரீட்டி, தமிழ்த்துறை மூன்றாமாண்டு மாணவர் மு.வசீமா பர்வீன், தமிழ்த்துறை முதலாண்டு மாணவி கீர்த்தனா, இளநிலை வேதியியல் துறை மாணவி கவி பிரபா, இரண்டாமாண்டு இளநிலை புள்ளியியல் துறை மாணவர் சோனா அகல்யா, இரண்டாமாண்டு ஆங்கிலத்துறை மாணவி ப.லக்கீஷாபிரமிதா உள்ளிட்ட பலர் அனைத்துக் கல்லூரிகளுக்கான போட்டிகளில் பங்கேற்று பரிசும் பாராட்டுகளும் பெற்றனர்.*

*14-07-2023 முதல் 24-07-2023 வரை மாவட்ட நிர்வாகத்தினரால் நடத்தப்பட்ட புத்தகத் திருவிழாவில் நம் மாணவர்கள் ஆடல், பாடல் மற்றும் சிலம்பாட்ட நிகழ்ச்சிகளைச் சிறப்பாக அரங்கேற்றினர். அனைத்துக் கல்லூரிகளுக்கிடையே நடைபெற்ற இலக்கியப் போட்டிகளில் பங்கேற்றுப் பரிசு பெற்றனர்.*

*11-12-2023 அன்று செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனத்துடன் இணைந்து நடத்தப்பட்ட பாரதியார் பிறந்தநாள் விழா பேச்சுப் போட்டியில் நம் கல்லூரி மாணவர்கள் முப்பத்து எட்டு பேர் பங்கேற்றுச் சிறப்பித்தனர். பரிசுத்தொகை மற்றும் விழாவிற்கு செம்மொழித் தமிழாய்வு நிறுவனம் ரூ.20000/= (இருபதாயிரம்) நிதி வழங்கியது.*

*11-01-2024 அன்று நுண்கலை மன்றம் சார்பாக கல்லூரி வளாகத்தில் பொங்கல் விழா சிறப்பாக நிகழ்த்தப்பட்டது. கரகாட்டம், கோலாட்டம் உள்ளிட்ட கலை நிகழ்ச்சிகள், கோலப்போட்டிகள், ஆசிரியர்களுக்கான விளையாட்டு நிகழ்வுகள் சிறப்பாக நிகழ்ந்தன. துறைவாரியாக பொங்கல் வைத்து வழிபாடு செய்யப்பட்டது. உழவர் திருநாள் என்பதால்*

*ஜல்லிட்டுக்காளைகள் வரவழைக்கப்பட்டு வழிபாடு செய்யப்பட்டது. முதல்வர் உள்ளிட்ட ஆசிரியர்கள், மாணவர்கள் டிராக்டர் ஊர்வலத்திலும் பங்கேற்றனர்.*

*08-02-2024 & 09-02-2024 ஆகிய நாட்களில் தமிழ்நாடு அரசு பொது நூலகத்துறையுடன் இணைந்து நடத்திய காவிரி இளைஞர் இலக்கியத்திருவிழா 150000/= (ஒரு லட்சத்து அய்ம்பதாயிரம்) நிதி நல்கையுடன் நடத்தப்பட்டது. பேச்சுப்போட்டி, நூல் விமர்சனம், உடனடி ஹைக்கூ உள்ளிட்ட பத்து வகையான போட்டிகள் நடத்தப்பட்டன. அனைத்துப் போட்டிகளிலும் நம் கல்லூரி மாணவர்கள் சிறப்பாக பங்கேற்று முதற்பரிசு 5000/= (அய்ந்தாயிரம்), இரண்டாம் பரிசு 4000/= (நான்காயிரம்), மூன்றாம் பரிசு 3000/= (மூவாயிரம்) என பரிசுகளை வென்றனர்.*

*21-02-2024 அன்று  ஜோதி அறக்கட்டளையுடன் இணைந்து நடத்தப்பட்ட உலகத் தாய் மொழி நாள் விழாவில் நம் கல்லூரி மாணவர்களுக்கு மெகந்திப் போட்டிகள் நடத்தப்பட்டு பங்கேற்றா 156 மாணவர்களுக்கு ஆயிரம் ரூபாய் மதிப்புள்ள புடவைகள் பரிசாக வழங்கப்பட்டது.*

*13-02-2024 முதல் 16-03-2024 வரை நம் கல்லூரி மாணவர்களுக்கான நுண்கலை மன்றப் போட்டிகள் நடத்தப்பட்டன. பேச்சு, கவிதை, கட்டுரை, ஓவியம், நடனம், பாட்டு, நிழற்படம், அடுப்பில்லா சமையல் உள்ளிட்ட இருபத்து அய்ந்து வகையான கலைப் போட்டிகள் நடத்தப்பட்டு 08-03-2024 நடத்தப்பட்ட நுண்கலை மன்ற விழாவில் பரிசு பெற்ற அனைவருக்கும் சான்றிதழ் மற்றும் புத்தகங்கள் பரிசாக வழங்கப்பட்டன.*

*28-03-2024 முதல் 01-03-2024 வரை ஆசிரியர்கள் ஆசிரியரல்லாப் பணியாளர்களுக்கான நுண்கலை மன்றப் போட்டிகள் நடத்தப்பட்டன. பெரும்பான்மையான ஆசிரியர்கள் ஆர்வமுடன் பங்கேற்றனர். அனைவருக்கும் 08-03-2024 அன்று நடைபெற்ற விழாவில் புத்தகங்கள் பரிசாக வழங்கப்பட்டது.*




*08-03-2024 அன்று காலை 11.00 மணிக்கு நுண்கலை மன்ற விழா தொடங்கியது. முதல்வர் அவர்களின் தலைமையில் மாநகர மேயர் சண்.இராமநாதன் மற்றும் அருங்கலையரசு சேலம் அபு ஆகியோர் பங்கேற்று சிறப்பித்தனர். பிற்பகல் 1.00 மணிக்கு நுண்கலை மன்ற மாணவர்களின் கலைநிகழ்ச்சிகள் மாலை 5.30 வரை நடைபெற்றது.*

************************